# பாராளுமன்ற ஆயுட்காலம் நீடிப்பு?

★ விலை ரூபா 1-00

ஈழநாடு
THE EELANADU

மலர் 24 ஐப்பசி 11 முஹற 10 இதழ் 257
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 28—10—82

**YARL HALL**
பிரதான வீதி, யாழ்ப்பாணம்
APP. and PURE MATHS
திரு. கமலசிங்கம்
Day Class
தினமும் 12-30—2-30
சனி, ஞாயிறு வகுப்புகள்
1-30 To 2-30
ஆரம்பம்: 30-10-82
4967

## ஜனாதிபதி யோசனை: அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

பாராளுமன்றத்தின் பதவிக்காலத்தை 1983-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் ஆறு வருட காலத்திற்கு நீடிப்பதற்கு மக்களிடம் அனுமதிபெற பொதுசன வாக்கெடுப்பு நடத்த வேண்டுமென்று அமைச்சரவையில் நேற்று ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன தெரிவித்த யோசனையை அமைச்சரவை ஏகமனதாக ஏற்றுக் கொண்டது.

[6-ம் பக்கம் பார்க்க]

# சாவகச்சேரி பொலிஸ் நிலையம்மீது தாக்குதல்! 3 பொலிஸார் பலி! துப்பாக்கிகள் 33 அபகரிப்பு!

## பொலிஸார் திருப்பிச்சுட்டதில் கொள்ளையர் மூவர் மரணமாம்

(மட்டுவில்)

**சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் நேற்று அதிகாலை இளைஞர் கோஷ்டி நடத்திய பயங்கர தாக்குதலில் 3 பொலிஸாரும், பொலிஸ் காவலில் வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர் ஒருவரும் பலியானார்கள். இளைஞர் கோஷ்டியில் வந்தவர்களில் மூவரும் பலியாகியிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.**

**பொலிஸ் நிலையத்திலிருந்த துப்பாக்கிகள், வெடிமருந்துகள் கொள்ளையடித்துச் செல்லப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.**

நேற்று அதிகாலை 5-15 மணிக்கு நடந்த இத்திடீர் தாக்குதலில் உடுவிலைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் எஸ். கருணனந்தன் (29 வயது) மிருசுவில் உசனைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் கந்தையா (54 வயது, கேகாலை நாகுல்லகமவைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் திலகரத்தின (23 வயது) பளை சோரன்பற்று இரட்டைக் கொலை சந்தேக நபர் பளையைச் சேர்ந்த பொன்னையா இராசகுமார் (22 வயது) ஆகியோர் பலியானார்கள்.

### சந்தேக நபர்கள்

பொலிஸ் சார்ஜன்ட் கே. கந்தையா (49 வயது) கான்ஸ்டபிள் எஸ். ஜெயதிலகா (29 வயது) ஆகியோர் படுகாயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சோரன்பற்று கொலைச் சந்தேகநபர்கள் எஸ். கார்த்திகேசு (51), கே. ஐயாத்துரை (29) ஆகிய இருவரும் காயமடைந்து யாழ்ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பொலிஸ்கான்ஸ்டபிள் எஸ். ஜெயதிலகா, கொலைச்சந்தேகநபர் எஸ். கார்த்திகேசு ஆகிய இருவரும் சத்திரசிகிச்சைக்குட்படுத்தப்பட்டனர். சோரன்பற்றுக் கொலைச்சந்தேகநபர்கள் அ. செல்வம், இ. சந்திரசேகரம், அ. சபாரத்தினம், மகான், கே. பெரியகுஞ்சன் ஆகியோர் கொள்ளையர்களினால் பொலிஸ் பாதுகாப்பிலிருந்து வெளியேற்றப்பட்டனர் என்றும் கூறப்படுகிறது.

நீலநிற மினிபஸ்ஸில் வந்தே இத்தாக்குதலை நடத்தியதாக

[6-ம் பக்கம் பார்க்க]

## யாழ். மாவட்டத்தில் 12 மணிநேரம் ஊரடங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் பொலிசார் நேற்று மாலை 12 மணிநேர உத்தியோகப்பற்றற்ற ஊரடங்குச் சட்டத்தைத் திடீரென அறிவித்ததைத்தொடர்ந்து யாழ். நகரம் அல்லோல கல்லோலப்பட்டது!

பொலிசார் ஜீப் வண்டியில் பொருத்தப்பட்ட ஒலிபெருக்கியில் 5-30 மணிக்கு 6 மணி முதல் ஊரடங்கு என்று அறிவித்தனர் சில நிமிட நேரத்திற்குள் கடைகள் பூட்டப்பட்டன; பஸ்கள், மினிபஸ்கள், டாக்ஸிகள் எந்த வீதி என்றும் பாராமல் புறப்பட்டன. சில மினிபஸ்கள் ஒழுங்கை வழியாகவும் ஓடின.

யாழ் நகரிலுள்ள தியேட்டர் ஒன்றில் படம்பார்த்துக் கொண்டிருந்த சுமார் 500 மாணவிகள் அவசர அவசரமாக ஸ்ரான்லி வீதி வழியாக கல்லூரி நோக்கி ஓடினர்.

சில தனியார் கல்விநிலையங்களிலும், வர்த்தக நிலையங்களிலும் நேற்று மாலை 'கலைமகள் விழா' ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது. ஊரடங்குச் சட்டமென்பதை அறிந்ததும்

[6ம் பக்கம் பார்க]

## பல்வேறு ரக துப்பாக்கிகள் கொள்ளையடிக்கப்பட்டன

(மட்டுவில்)

மினிபஸ்ஸில் வந்த இளைஞர்கள் வீதியால் சென்ற லொறி ஒன்றையும் இ. போ. ச பஸ் ஒன்றையும் தடுத்து நிறுத்தினர் என்றும் நிறுத்தப்படாத தால டயருக்குச்சுட்டு தெருவின் குறுக்கே நிறுத்தினர் என்றும், டெலிபோன் வயர்களை அறுத்தும். துப்பாக்கிப் பிரயோகம் செய்தும் தாக்குதலை நடத்தியபடி பொலிஸ் நிலையத்தினுள் புகுந்து அங்கிருந்த ஆயுதங்கள், தோட்டாக்கள் முதலியவற்றைக்

[6ம் பக்கம் பார்க]

## குட்டிமணி நியமனம்: தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு?

(கொழும்பு)

வட்டுக்கோட்டைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக குட்டிமணி என அழைக்கப்படும் எஸ். யோகச்சந்திரன் நியமிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் அறிவித்திருப்பதாகத் தெரிய வருகிறது,

மேற்படி நியமனம் சம்பந்தமான அறிவிப்பு வர்த்தமானி பிரசுரத்துக்கு அனுப்பப் பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது,

தேர்தல் ஆணையாளர் இது குறித்து பாராளுமன்ற செயலாளர் நாயகத்துக்கும் அறிவித்துள்ளதாகக் கூறப்பட்டது.

**கே.ஜி.எக்ஸ்பிரஸ் பஸ் சேவை**

**வார முடிவு பகல் சேவை**

எமது குளிர்மையூட்டப்பட்ட (Air Conditioned)
மேர்சிடெஸ் பென்ஸ் லக்சறி கோர்ச்
வார முடிவு பகல் சேவை
29-10-82 முதல் ஆரம்பமாவதை
மகிழ்ச்சியுடன் அறிவித்துக்கொள்கிறோம்

புறப்படுதல்:

**கொழும்பு -- யாழ்ப்பாணம்**
வெள்ளிக்கிழமைகளில் நண்பகல் 12-00 மணிக்கு
சபையர் தியேட்டர் வெள்ளவத்தையில்
இருந்து புறப்பட்டுப் பின்னர் பி. ப. 1-00 மணிக்கு
இடம்: 545, ஸ்ரீசங்கராஜ மாவத்தை,
கொழும்பு-10-ல் இருந்து புறப்படும்.

**யாழ்ப்பாணம்--கொழும்பு**
ஞாயிற்றுக்கிழமைகளில் பி. ப. 1-00 மணிக்கு
இடம்: வெலிங்டன் தியேட்டர்,
மணிக்கூட்டுக்கோபுர வீதி,யாழ்ப்பாணம்

பதிவுசெய்துகொள்ளுமிடங்கள்:
கொழும்பு—
(1) கே ஜி. எக்ஸ்பிரஸ் கந்தோர்,
545, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை,
கொழும்பு-10, தொலைபேசி: 21669
(2) ராஜேஸ்வரி ஹோட்டல்,
(கோட்டை புகையிரத நிலையத்திற்கு எதிரில்)
கொழும்பு. தொலைபேசி: 25939
(3) சபையர் தியேட்டர்,
கொழும்பு-6. தொலைபேசி: 588260
யாழ்ப்பாணம்:-
வெலிங்டன் தியேட்டர்
(4976) யாழ்ப்பாணம், தொலைபேசி:021/22559

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

புதிய HITACHI ரி. வி-27'' (கலர்), புதிய PHILIPS தன்னியக்க சலவை இயந்திரம், மோட்டர் (1 HP) ஆகியவை விற்பனைக்குண்டு. தொடர்பு: நிமலன் செல்வராஜா, G.P.S ரோட், கல்வியங்காடு. 4946

தாவடி வடக்கில் உள்ளதும், காணியின் வடக்குப் பக்கத்தில் தெரு அமைந்துள்ளதும், வன்னியசிங்கம் வீதியின் முடிவில் உள்ளதுமான மின்சார வசதி பெறக்கூடியதுமான காணியில் மூன்று பரப்பு வரையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க: பண்டிதர் செ. சிவப்பிரகாசம், தாவடி, கொக்குவில். (4961)

## தேவை

நல்ல அனுபவமுள்ள லொறி றைவர் யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல வர்த்தக ஸ்தாபனத்திற்குத் தேவை. சகல விபரங்களுடன் உடனடியாக விண்ணப்பிக்கவும்: விளம்பர இல. 4968 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (4968)

## வாடகைக்கு

குசினி, இரு அறைகள், விறுந்தை கொண்ட பகுதிவீடு யாழ் நகரத்தில் வாடகைக்குண்டு. மின்சார தண்ணீர் வசதியுண்டு. (சிறிய குடும்பத்திற்கு கொடுக்கப்படும்) முழு விபரங்களுடன் விண்ணப்பிக்கவும் விளம்பர இல: 4957 மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். (4957)

## ஆசிய விளையாட்டுக்கு 102 பாக். வீரர்கள்

புதுடில்லி, அக் 27

நவம்பரில் புதுடில்லியில் நடைபெறவுள்ள ஆசிய விளையாட்டுப் போட்டிகளுக்கு பாகிஸ்தான் 102 விளையாட்டு வீரர்களை அனுப்பி வைக்கவுள்ளது.

இவ் வீரர்கள், குத்துச் சண்டை, சைக்கிளோட்டம், ஹொக்கி, ஆகியவை உட்பட ஆசிய விளையாட்டுக்களின் 16 பந்தயங்களிலும் கலந்து கொள்வார்கள். (கி)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

# "குசினிக்குள்ளிருந்த என்னை இழுத்துச் சென்று இரண்டாம் எதிரி வானில் ஏற்றினர்"

## வல்வை பெண் கடத்தல் வழக்கில் சரோஜினி சாட்சியம்

(புலோலி நிருபர்)

"சம்பவதினமிரவு நான் குசினிக்குள் இருந்த போது 4ம் எதிரி உதயகுமார் ஓடி வந்து குசினிவாசலில் நான் வெளியே போகமுடியாது தடுத்துக் கொண்டு நின்றார். 2ம் எதிரி பிறேம்ராஜ் ஓடிவந்து என்னைப் பின்பக்கத்தால் தூக்க எத்தனித்தார். நான் விடவில்லை. அவர் வலோற்காரமாக என்னை இழுத்துச்சென்று வானில் ஏற்றினார். என்னை இழுத்துக் கொண்டு செல்லும்போது கூட்டமாக நின்றவர்களில் எதிரிகளான ரவிசங்கர், உதயகுமார், யோகேந்திரன் ஆகியோரையும் கண்டேன்".

இவ்வாறு வல்வெட்டித்துறை பெண் கடத்தல் வழக்கு விசாரணையில் சாட்சியமளித்த கடத்தப்பட்ட இளம்பெண் ஈஸ்வரபாதம் சரோஜினி (வயது 21) சாட்சியமளிக்கையில் குறிப்பிட்டார். இப்பெண் கடத்தல் வழக்கு விசாரணை பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. வி பி சுந்தரலிங்கம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு வருகின்றது.

வல்வெட்டித்துறைப் பொலிசார் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஈஸ்வரபாதம் சரோஜினி என்ற இளம்பெண்ணைக் கடத்திச் சென்றார்கள் என்று குற்றஞ்சாட்டி அதே இடத்தைச்சேர்ந்த பாலசுப்பிரமணியம் ரவிசங்கருக்கும் இன்னும் எட்டுப்பேருக்கும் எதிராகக் குற்றஞ்சாட்டி வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். 1ம், 2ம், 4ம், 6ம், 9ம் எதிரிகள் சமூகமாக இருந்தனர். 7ம் எதிரி இறந்துவிட்டார். 3ம், 5ம், 8ம் எதிரிகளுக்கு பகிரங்க பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறைபொலிஸ் உத்தியோகத்தர் திரு டேவிட்டும், பொலிசாருக்கு உதவியாகச் சட்டத்தரணிகளான ஆர். ஸ்ரீசிவாயா, என். கிருஷ்ணராசா, ஆர். டி. இரத்தினசிங்கம், கே. முத்துக்குமாரு ஆகியோரும் ஆஜராகியிருந்தனர்.

1ம் எதிரி சார்பில் சட்டத்தரணி கனக மனோகரனும், 4ம் எதிரி சார்பில் சட்டத்தரணி செல்வி விஜயராணி மகாதேவாவின் அனுசரணையுடன் சட்டத்தரணி கனகமனோகரனும், 2ம், 6ம், 9ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி எஸ். சிவனருள் சுந்தரத்தின் அனுசரணையுடன் சட்டத்தரணி வி. செல்வத்தம்பியும் 8ம் எதிரி சார்பில் சட்டத்தரணி பாலகிருஷ்ணனும் ஆஜராகியிருந்தனர்.

விசாரணையின் போது தொடர்ந்து சாட்சியமளித்த சரோஜினி குறிப்பிட்டதாவது:

1981ம் ஆண்டு ஆவணிமாதம் 24ம் திகதி நான வல்வெட்டித்துறையிலுள்ள எனது வீட்டிலிருந்தேன். சம்பவதினத்தன்று எனது பேரன் இராசமாணிக்கம், மீனாட்சிப்பிள்ளை, பத்மினி, றஞ்சினி, ராஜினி, பிறேம்குமார், ரவிகுமார் சுரேஷ்குமார் ஆகியோரும் இருந்தார்கள். நாங்கள் இருந்த வீடு எனது அப்பா ஈஸ்வரபாதத்துக்குச் சொந்தமானது. வீட்டிற்கு முன்பாக குசினி இருக்கின்றது.

### தூக்க எத்தனித்தார்

சம்பவதினம் இரவு சுமார் 7 மணியளவில் எனது சகோதரர்களுக்குச்சாப்பாடுகொடுத்துக் கொண்டிருந்தேன். அப்போது ஒருவர் ஓடிவந்துகுசினி வாசலைப் பிடித்துக்கொண்டு என்னை வெளியேபோகவிடாதவாறு நின்றார். அப்படி நின்றவர் இன்று மன்றிலிருக்கும் 4ம் எதிரியான உதயகுமாராவர். அப்போது இன்னொருவர் ஓடி வந்து என்னைப் பின்பக்கத்தால் தூக்க எத்தனித்தார். நான் விடவில்லை. அவர் இம்மன்றிலிருக்கும் 2ம் எதிரியான பிறேம்ராஜ். அவர் என்னை வெளியே கொண்டுவருவதற்கு வலோற்காரமாக, வில்லங்கமாக இழுத்தார். ஆனால் நான் விடவில்லை.

2ம் எதிரி என்னை இழுத்துக் கொண்டு வெளியே வரும்போது வீட்டில் சிலர் கூட்டமாக நின்றார்கள். அவர்கள் வீட்டில் உள்ளவர்களுடன் சண்டை பிடித்துக்கொண்டு நின்றதையும் நான் கண்டேன். எத்தனை பேர் கூட்டமாக நின்றார்கள் என்று என்னால் சொல்ல முடியாது. அங்கு கூட்டமாக நின்றவர்களில் இன்று மன்றில் எதிரிகளாக இருக்கும் ரவி சங்கர், உதயகுமார், யோகேந்திரன் [1ம், 4ம், 9ம் எதிரிகள்) ஆகியோரும் நின்றார்கள். இன்னும் இருவரை எனக்குத் தெரியும். மற்றவர்களை எனக்குத் தெரியாது. அந்த இரண்டு பேரில் ஒருவர் பெயர் விஜயகுமார். மற்றவரின் பெயா எனக்குத் தெரியாது.

என்னைப் பிடித்து இழுத்துக் கொண்டு வரும்போது வீட்டில் உள்ளவர்கள் என்னை இழுத்துக் கொண்டு போகாமல் தடுக்க அவர்களை கூட்டத்திலுள்ளவர்கள் தடுத்தார்கள், இராசமாணிக்கம், மீனாட்சிப்பிள்ளை, பத்மினி, பக்கத்துவீட்டு ஞானகுரு ஆகியோர் தடுத்தார்கள். தடுக்கவும் என்னை இழுத்துச் சென்றார்கள்.

என்னை அப்படி வீட்டிற்கு வெளியே இழுத்துவந்து ஒழுங்கையால் இழுத்துச்சென்றார்கள். அப்படி இழுத்துச்செல்லும் போது நான் சத்தம்போட்டுக் கத்தினேன், அப்படி நான் சத்தம் போட்டபோது அயலவர் சிவகுருநாதன் வந்து தடுத்தார் அவருக்கு அடித்தார்கள் அப்படி ஒழுங்கையில் உள்ள சிலரும் தடுக்கும்போதும் அவர்கள் என்னை இழுத்துக்கொண்டு போனார்கள். ஒழுங்கைத்தலைப்பில் உள்ள வான் ஒன்றில் ஏற்றினார்கள். நீளமான அந்த வானின் நிறம் எனக்கு ஞாபகமில்லை. என்னை வானுக்குள் ஏற்ற எத்தனித்தபோது நான் தடுத்தேன். இருந்தும் என்னை இழுத்து வானுக்குள் ஏற்றினார்கள்.

வான் ஓடத் தொடங்கியது. 2ம் எதிரியே வானை ஓட்டிச் சென்றார். அப்படி என்னை வானில் கொண்டு போகும் போது இரண்டுபேர் இருந்தார்கள் ஜெயசங்கர், விஜயகுமார் ஆகிய இருவருமே என்பதைக் கண்டுகொண்டேன். என்னை 2ம் எதிரியே வீட்டிலிருந்து ஒழுங்கைக்கு இழுத்துச்சென்றார். வான் நின்றஇடம் வரைக்கும் அவரே இழுத்துச்சென்றார்.

என்னை வானில் ஏற்றுவதற்கு ஜெயசங்கரும் முயற்சித்தார் நான் வானின் இலக்கத்தைக் கவனிக்கவில்லை. என்னை ஏற்றி வான் வெளிக்கிடும் போது 7-25 மணியிருக்கும், வான் ஓடிக்கொண்டிருக்கும் போதும் நான் கத்தினேன் அப்படி ஓடிய வான் இடையில் நிறுத்தப்பட்டு வானை ஓட்டி வந்தவர் இறங்க இன்னொருவர் வானை ஓட்டினார். நான் வானில் முன்சீற்றில் இருந்தேன். வானை ஓட்டிச் சென்றவரைத் விர இன்னும் இருவர் அங்கு இருந்தார்கள். அவர்கள் இன்று மன்றில் இல்லை.

### எந்தப்பக்கம் போனது தெரியாது

எனக்குப் பக்கத்தில் முன் சீற்றில் ஜெயசிங்கமும் விஜயகுமாரும் இருந்தார்கள். வானில் நான் இருந்த ஆசனத்திற்குப் பின் ஆசனத்தில் ஆட்கள் இருந்த சத்தம் கேட்டது நான் திரும்பிப் பார்க்கவில்லை அந்தவான் உடுப்பிட்டிப் பக்கமாகப் போனதுபோல இருந்தது. ஆனால் எந்தப்பக்கம் போனதென்று என்னால் முடிவாகச் சொல்ல முடியாது வான் இடைவெளியில் மறிக்கப்பட்டு ஓடிவந்தவர் இறங்கி இன்னும் ஒருவரிடம் ஓடக்கொடுத்தார் என்று கூறினேன். அப்படி வானை ஓடியவர் விஜயகுமார். விஜயகுமார் வானை ஓடிக்கொண்டிருக்கும் போது வானுக்குப் பெற்றோல் இல்லையென்று கதைத்தார்கள் ரவி என்பவர் பெற்றோல் கொண்டு வந்தார் என்று கதைத்தார்கள். ஆனால் எனக்கு என்ன நடந்தது என்று தெரியாது. கடற்கரைப்பக்கமாக என்னையும் வானையும் நிற்பாட்டினார்கள். வான் நின்றதும் என்னைக் காப்பாற்றுங்கள் என்று அழுதேன். பக்கத்தில் உள்ளவர்கள் ஓடிவந்தார்கள்

கேள்வி- உன்னை அப்படிக் கொண்டு போனவர்கள் உன்னுடன் ஒன்றும் கதைக்கவில்லையா? என்ன காரணத்திற்காகக் கொண்டு போகிறோம் என்று சொல்லவில்லையா?

பதில்- என்னை வானில் கொண்டுபோகும்போது பக்கத்திலிருந்து ஜெய்சங்கர் ஏன் விருப்பமில்லை. புலிப்படையில் சேர்ந்ததனாலேயோ? என்று கேட்டார். வீட்டிற்கும் சொல்லிப்போட்டுத்தான் வந்தனான் என்று கூறினார். அதற்கு எனக்கு விருப்பமில்லை என்று சொல்லி நான் அழுதேன்.

விசாரணை தொடர்கிறது.

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் துந்துபி வருடம் ஐப்பசி மாதம் 13-ம் நாள் (30-10-82) சனிக்கிழமை பகல் 1-39மணிக்கும் 2-51 மணிக்கும் உள்ளாக வரும் சுபவேளையில்,

| | |
|---|---|
| எனது புத்திரன்<br>திருநிறை செல்வன்<br>**சதாசிவம்**<br>அவர்களுக்கும்<br>(யா. மா. அ சபை, நல்லூர் உப பணிமனை) | எமது புத்திரி<br>திருநிறை செல்வி<br>**பரமேஸ்வரி**<br>அவர்களுக்கும் |

திருநெல்வேலி சிவாலயத்தில் திருமணம் நிகழத் திருவருள் பாலித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் சுற்றஞ்சூழ வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்

அன்று மாலை 5 மணிக்கு மணமகனில்லத்தில் வரவேற்புபசாரம் நடைபெறும்

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திருமதி தையல்நாயகி செல்லையா, பூதவராயர் வீதி, திருநெல்வேலி கிழக்கு.

வா. கிருஷ்ணபிள்ளை தம்பதிகள் இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கு.

வரவேற்பாளர்:

திரு.திருமதி அ. செல்லத்துரை (அதிபர், திருநெல்வேலி இ. த. க. பாடசாலை)

திரு.திருமதி கி கந்தசாமி

(4958)

# இன்றைய பலன்

ஐப்பசி மாதம் 11-ம் திகதி வியாழக்கிழமை (28—10—82)

**மேடம்:** மனையில் பூசல்கள் தோன்றிமறையும், தனிமையையே விரும்புவீர்கள், தொழில் புரியும் இடத்தில் கண்துடைப்பு வேலை நடைபெறலாம்.

**இடபம்:** தடைப்பட்ட காரியங்கள் இன்று நல்ல முடிவுக்கு வரும் தாய்வளிப் பெருமைக்கும் இடமுண்டு வாகன நலத்துடன் வாழ்விலும் நலம் காணும்.

**மிதுனம்:** உல்லாசமாகப் பொழுதைப் போக்குவீர்கள். இன்று சுறுசுறுப்புடன் செயலாற்றுவீர்கள் பிள்ளைகளின் நடவடிக்கைகள் பெருமையை தரலாம்,

**கடகம்:** தூரதேசச் சகவாசம் உங்களைத் துயரத்தில் ஆழ்த்தும். எதிர்பாராத விபத்துக்களுக்கும் இடம் ஏற்படலாம் ஆயுதங்களுடன் பழகுபவர்கள் அவதானமாக இருக்கவும்.

**சிங்கம்:** குடும்ப வாழ்க்கை குதூகலம் நிறைந்ததாக இருக்கும். காதலர்களாயின் இத்தினம் கற்கண்டுபோல் இனிக்கும். பிரிந்தவர்கள் மீண்டும் வாழ்க்கையில் இணைவதற்கு இடமுண்டு.

**கன்னி:** எதிர்பாராத முனையில் இருந்து ஆபத்து உருவாகும். உள்வீட்டிலேயே பூசல்கள் தோன்றக்கூடும். இயந்திரங்களுடன் பழகுபவர் எச்சரிக்கையுடன் இருக்கவும்.

**துலாம்:** இறைவழிபாடு மேலோங்கி நிற்கும். இதயத்தில் அமைதி ஏற்படும். முதியவர் ஒருவர் தக்க சமயத்தில் உங்கட்கு ஆதரவு தருவதற்கு வருவார்.

**விருச்சிகம்:** கடமையில் அதிக ஆர்வம் பிறக்கும். எதையும் துரிதமாகச் செய்யின் வெற்றி காண்பீர்கள். சிலருக்கு நன்மையான இடமாற்றமும் ஏற்படலாம்.

**தனு:** புதுமையானசம்பவங்கள் நடைபெறும். சிலருக்கு அதிர்ஷ்டலாபங்களுக்கும் இடமுண்டு விருந்தினர் வருகை உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும்.

**மகரம்:** ஏமாற்றத்தின் தாக்குதல் உங்கட்கு வேதனையைத் தரலாம். குடும்பத்திலும் சிறிய பூசல்கள் தலைதூக்கும், தனிவழிப் பயணத்தைத் தவிர்த்துக் கொள்ளவும்

**கும்பம்:** அவசர புத்தியினால் விபரீதங்கள் விளையலாம். கோபத்தை அடக்கின் நிலமை சீர் பெறும். அடக்கமாக இருப்பது விரும்பத்தக்கது

**மீனம்:** சொற்சிலம்பமாடுவதில் இன்று முன்னணியில் நிற்பீர்கள். பிறருடைய மதிப்புக்கும் இலக்காகுவீர்கள் இன்று வரவேற்றக வேண்டிய தினம்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## நடேஸ்வரா வெற்றி

(காங்கேசன்துறை)

யாழ்ப்பாணம் பாடசாலைகள் சங்க உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி அமைப்பின் கீழ் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரிக்கும், யாழ்ப்பாணம் கனகரத்தினம் மகாவித்தியாலயத்திற்கும் இடையில் கனகரத்தினம் மகாவித்தியா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்ட போட்டியில் 2ம் பிரிவில் 6-0 கோல்களாலும், 3ம் பிரிவில் 3-0 கோல்களாலும் நடேஸ்வராக் கல்லூரி வெற்றியீட்டியுள்ளது.

இதேகல்லூரிகளுக் கிடையில் சிநேக பூர்வமாக நடைபெற்ற 1ம் பிரிவு போட்டியில் நடேஸ்வரா 1-0 கோலால் வெற்றியீட்டியுள்ளது.

## மணிவாக்கு

மனதைத் தூய தாக்குவது எதோ
அது மெய்ஞ்ஞானம், மற்றதெல்லாம்
வெறும்ஞானம்.

— அருள்விருந்து

# நமது நோக்கு

## அவசரகாலம்

ஜனாதிபதி தேர்தல் முடிவடைந்ததும் 'அவசர காலம்' பிரகடனப்படுத்தியது எவ்வளவு அவசியமென்பது எமக்கு இன்று தான் தெளிவாகின்றது.

தேர்தல் அமைதியாக நடந்ததென்ற தேற்றமான செய்தி உண்மைநிலையை ஓரளவிற்கு மூடி மறைத்ததாக கணிக்க நியாயமுண்டு.

கடந்த திங்கட்கிழமை வரை 39 நாட்களில் ஆயிரத்து இருநூறு முறைப்பாடுகள்; தேர்தல் அன்று தொடக்கம் ஆறு நாட்களில் முப்பத்தொன்பது அசம்பாவிதங்கள்; இவற்றுள்சில கொலை, கொள்ளை, தாக்குதல், தீ வைப்புப் போன்ற வன்செயல்கள் நடைபெற்றன என்பது பொலிஸ் அறிக்கை.

தேர்தல் வன்செயல்களில் ஆளுங்கட்சியினர் சிலர் அகப்பட்டதாக வெளிவரும் செய்தி உண்மையானால் வெற்றி ஈட்டிய கட்சியின் ஆதரவாளர்கள் துணிகர அக்கிரமங்களில் ஈடுபட்டிருக்கின்றனரென்ற கூற்றை அது ஆதரிக்கின்றது.

இவ்விடயமாக சுதந்திரக் கட்சி உயர்மட்டத்தலைவர்கள் பொலிஸ் மா அதிபரைச்சந்தித்துப் பேசியிருக்கின்றனர்; நிலைமை உண்மையில் மோசமென அவர்கள் உணர்ந்தால் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவைச் சந்திக்க அவர்கள் தயங்க வேண்டியதில்லை; கடின நோய்களுக்கு நிபுணர் ஆலோசனை தேவையென்பது தெளிவு.

இன்றைய நிலையில் அவசரகாலச்சட்டம் தொடர்ந்திருக்க வேண்டியது அவசியமானால், இவ்வித நெருக்கடி சடுதியாக வந்ததாக எண்ணுவதற்கு இடமில்லை.

தேர்தல் அன்று அதனைக் குழப்பக்கூடிய நிலை ஏற்படாது நாட்டின் எல்லாப் பக்கங்களிலும் அமைதி நிலவியது தற்காலிகமானதாய் இருந்தாலும், அது பொலிஸாரின் பாதுகாப்பு நடவடிக்கைகளின் திறமையை நிரூபிக்கின்றது.

இதற்கு பொலிஸ்மா அதிபரை நாம் அன்றே பாராட்டியிருந்தோம்; இன்று நிலைமை மாறுபட்டிருப்பதனால், அவசரகாலச்சட்டம் மட்டும் போதுமானதல்ல: விடயம் பாரதூரமாக மாறுவதைத் தடுக்க எதிரணியினர் மட்டுமல்ல, மற்றைய தலைவர்களும் ஜனாதிபதியைச்சந்தித்து தக்க நடவடிக்கைகளுக்குரிய கருத்துக்களை, ஆலோசனைகளை வழங்கவேண்டும்.

ஜனநாயக ஆட்சிமட்டுமல்ல ஜனாதிபதி ஆட்சி என்பதையும் நினைவிற்கொளல் நலம். இந்தச் சிறுநாட்டில் உடனடி ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் கொண்டு வரக்கூடிய அதிகாரமும் ஆளுமையும் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவில் உண்டென்று மக்கள் தீர்ப்பளித்திருக்கின்றனர்.

கடந்த 20ம் தேதி இன்றைய ஜனாதிபதி அட்பதவிக்கு ஒரு வேட்பாளர் என்று கருதலாம். இன்று அவரை ஜனாதிபதியென்ற கோதாவில் சந்திக்க எதிரணித்தலைவர்களுக்கு எவ்வித கூச்சமும் தயக்கமும் இருக்கவேண்டியதில்லை.

அவசரகாலச்சட்டம் தொடர்ந்து அமுலில் இருக்கவேண்டுமென்று கருதும் எதிரணியினர் அது உறைப்பாக செயற்படுவது எல்லாக்கட்சிகளின் ஒத்துழைப்பில் தங்கியுள்ளதென்பதை மறந்துவிடலாகாது.

இன்று பாராளுமன்றத்தில் நடைபெறவிருக்கும் விவாதம் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் மோசமான நிலை ஒன்று நாட்டில் உருவாகிறதென்றால் ஜனாதிபதி அவர்கள் உடனடி சிகிச்சை எடுப்பதற்கு எதிரணித்தலைவர்களின் உறுதிகொண்ட ஆதரவு மிக அவசியமாகும்.

தேர்தலை ஒரு சாட்டாக வைத்து நாட்டில் குழப்பங்கள் ஏற்படுத்தும் தீயசக்திகள் எந்தக்கட்சியிலும் இருக்கலாம்; வெற்றிதோல்வியைப் பொறுத்து தாம் தயாராக்கின 'டைம்' குண்டுகளை வீசுவது ஒரு மரபாக வரும் அறிகுறிகள் இருப்பதை நாம் மீண்டும் வற்புறுத்துகின்றோம்.

இதற்குப் பலியாகின்ற பெண்கள், குழந்தைகள், மற்றும் அப்பாவி மக்கள் ஒரு யுத்தத்தில் பலியாகும் பொது மக்களின் கதிக்கு இலக்காகின்றனர்.

இனக்கலவரங்கள் காலத்துக்குக்காலம் நடந்திருக்கின்றன; கட்சிப் போட்டிகள், தனிப்பட்ட குரோதங்கள், அரசியலை அடிப்படையாகக் கொண்டு நிகழ்வது இன்றைய அனுபவம்; இவை வேறு விதமான பயங்கரவாததை வளர்க்க அமைதி வாழ்வை அழிக்க ஏதுவாகலாமென்பது; நாட்டின் இன்றைய சூழ்நிலை மட்டுமல்ல உலகில் பலநாடுகளில் வளர்ந்து வரும் கொந்தளிப்புகள் புகட்டும் பாடம்.

அதே சமயம் நிலைமையைச் சீராக்க எடுக்கும் நடவடிக்கைகள் பொது மக்களை ஒடுக்கும் தீவிரத்தைத் தடுக்க வேண்டிய தன்மையுடையனவாக இருக்க வேண்டும்.

இந்த அடிப்படையில் அரசின் பொறுப்பை அனுதாபத்துடன் கணிக்கும்பொது ஜன அபிப்பிராயமும்; பொது மக்களின் – எந்தக் கட்சியினராக விருப்பினும் – பாதுகாப்பை முக்கிய நோக்கமாகக் கொண்ட அரசின் நிருவாகத் திறனும் சமாதான வாழ்வுக்கு இன்றியமையாதன வென்பதை நினைவூட்டுகின்றோம்.

## நவசக்தி ஹோமம் அம்பாள் பவனி

(யாழ்ப்பாணம்)

இணுவில் சிவகாமி அம்மன் ஆலயத்தில் நவகலச அபிஷேகம், நவசக்தி ஹோமம் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளன. இரவு நவதுவாரதங்க விமானத்தில் அம்பாள் வீதி உலாவரும் காட்சியும் இடம் பெறும்.

## "ஜனநாயகம் செயல்பட வேண்டும்"

[யாழ்ப்பாணம்]

"இனமதபேதமின்றி இலங்கை மக்கள் நாடளாவிய ரீதியில் அமோகமாக வாக்களித்து ஜனாதிபதியாக மீண்டும் ஜே. ஆர். ஜெயவர்த்தனாவைத் தெரிவுசெய்ததன மூலம் தொடர்ந்து ஜனநாயகம் இலங்கையில் செயல்பட அனுமதித்துள்ளார்கள் என்று கடந்த பொதுத்தேர்தலிலே மானிப்பாய் தொகுதி ஐ. தே. கட்சி வேட்பாளராக போட்டியிட்டவரும் சமாதான நீதவானுமான ஆர். எஸ். அலோசியஸ் புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள ஜே. ஆர் ஜெயவர்த்தனவுக்கு அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

'இலங்கைவாழ் சகல மக்களின் அச்சங்களையும் போக்கி யாவரும் சம உரிமையுடனும் சமத்துவத்துடனும் வாழவும், பசி பட்டினியின்றிவாழவும், ஜனநாயகம் செயல்படவும் தாங்கள் வழிவகுப்பீர்கள் என்று நம்புகிறோம்' என மேலும் தெரிவித்துள்ளார்.

## "கடமையுணர்வுள்ள ஊழியராக இருந்தார்"

[அரியாலை]

சிறந்த தொழிற்சங்க வாதியாகவும், கடமையுணர்வுள்ள ஊழியராகவும் பணிபுரிந்த திரு. இளையதம்பியின் திடீர் மறைவு இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை டிப்போவுக்கு பாரிய இழப்பாகும்"

இவ்வாறு பருத்தித்துறை டிப்போ முகாமையாளர் திரு. ஐ. மாசிலாமணி பஸ்போக்குவரத்துநடத்துநர் திரு. இளையதம்பியின் இறுதிக்கிரியையின் போது இரங்கலுரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

ஏழாலையில் அவரது இல்லத்தில் நடைபெற்ற இறுதிக்கிரியையின் போது திரு. மாசிலாமணிதொடர்ந்து பேசுகையில் பொதுமக்களோடுமிகவும் அன்பாகவும் பண்பாகவும் பழகிப்பணிபுரிந்த இவர், தொழிலாளர்களோடும் அதிகாரிகளோடும் மிகவும் சிறந்த முறையில் நடந்துகொண்டது குறிப்பிடத்தக்கது என்று குறிப்பிட்டார்.

அகில இலங்கைத்திருவள்ளுவர் மகாசபையின் தலைவர் திரு. எம். சிவதாசன் மாலை அணிவித்தார்.

சமூக இரத்தினம் திரு எம். கே. இளையப்பு, திரு. ஆ. திரவியநாயகம் திரு. எஸ். சொலமன் ஆகியோர் இரங்கலுரை நிகழ்த்தினார்கள்.

அவரது இறுதிக்கிரியையின் போது பருத்தித்துறை டிப்போவைச்சேர்ந்த ஏராளமான ஊழியர்களும் அதிகாரிகளும் கலந்துகொண்டு தமது இறுதி அஞ்சலியைச்செலுத்தினர்.

## சிரமதானம்

(கரவெட்டி)

கரணவாய் வடக்கு கிராமோதய சபை உறுப்பினர்கள் கரணவாய் பொன்னம்பல வித்தியாசாலையில்சிரமதானப்பணியில் ஈடுபட்டார்கள்.

வித்தியாசாலை அதிபர் திரு ச. தாமோதரம் தலைமையில் நடந்த இச் சிரமதானத்தின் போது. வித்தியாசாலை விளையாட்டுமைதானம் துப்பரவாக்கப் பட்டது.

கரணவாய்வடக்கு கிராமோதயசபைத் தலைவர் திரு. ஆ. க. மாணிக்கம் சிரமதானததை ஆரம்பித்து வைத்தார்.

## "குழந்தைகளின் அவதானிப்பு வளர்ந்தவரிலும்கூர்மையானது"

(யாழ்ப்பாணம்)

குழந்தைகளின் அவதானிப்பு சக்தியும், கிரகிக்கும் ஆற்றலும், ஞாபக சக்தியும் வளர்ந்தவர்களை விடக் கூர்மையும் ஆற்றல் மிக்கதாகும். வளர்ந்த பிள்ளைகளின் கூர்மையும் ஆற்றலும் பரீட்சையில் சித்திபெறுவது, வகுப்பில் முதலாவதாக வருவது எனும் சுயநலமானது. ஆனால் குழந்தைகளின் கூர்மையும், ஆற்றலும் சுயநலங்கள் எதுவும் அற்றதூய்மையானது. இந்தக் குழந்தைகளின் இயல்பை மழுங்கச் செய்யாது வளர்த்து வருவதே வளர்ந்தோரின் கடமையாகும்.

இவ்வாறு மாவிட்டபுரம் ஈஸ்வரி சிறுவர் பாடசாலையின் பரிசளிப்பு விழா – கலைவிழாவில் பேருரை நிகழ்த்திய மகாவலி அபிவிருத்தித்திட்டப் பொறியியலாளர் திரு சி. குமாரபாரதி தமது உரையில் குறிப்பிட்டார். சமாதான நீதவான் திரு. வ. வைரவப் பிள்ளை தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

திரு. வைரவப்பிள்ளை தமது தலைமையுரையில் "குழந்தையும் தெய்வமும் ஒன்றெனக் கொண்டு பேணும் மரபு எமது தமிழ் மரபாகும். சர்வதேச ரீதியில் பெரும் அறிஞர்கள், மேதைகள், நிபுணர்களை உருவாக்கும் முற்படிகளாக விளங்கும் சிறுவர் பாடசாலைகளை, ஏதோ ஊதியம் கிடைக்கும் ஒரு வழியாக மேற்கொள்ளுவது பெரும் பாவச் செயலாகும் ஆனால் ஈஸ்வரி சிறுவர் பாடசாலை சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குவது போற்றப் பட வேண்டியதாகும்" என்றார்.

திருமதி சந்திரபிரபா குமாரபாரதி இவ்விழாவில் பரிசில்களை வழங்கினார். சிறுவர்களின் விநாயக புஷ்பாஞ்சலி. அபிநயப்பாடல், பாடல் அபிநயங்கள், முருகன் நடனம், நாடகம் கும்மி, காவடி, தமிழ் பாட்டு, தமிழ்கதை, ஆங்கிலப் பாடல், ஆங்கில நாடகம் ஆகிய கலை நிகழ்ச்சிகள்சபையோரின் பாராட்டைப் பெற்றன.

சிறுவர்பாடசாலை ஆசிரியை செல்வி ஜெகராஜலட்சுமி விஸ்வநாதனின் தன்னலமற்ற சேவையைப்பலரும் பாராட்டிப்பேசினர். (உ)

## "அம்பிகைக்கு நன்றி செய்வதே நவராத்திரி விழாவாகும்"

(அரியாலை)

"பயன்தரும் கல்வி இறை நம்பிக்கையாகும். இறை நம்பிக்கையை மக்கள் மத்தியில் வளர்க்கும் இடங்களாக, கல்விக்கூடங்களும், தொழிற்சாலைகளும் விளங்கவேண்டும் இவ்விடங்களில் நவராத்திரி விழாக்கள் நடைபெறுவது மிகவும் விசேடமாகும். நவராத்திரியின் விசேட அம்சமாக அம்பிகையின் வழிபாடு அமைகிறது. இந்த அம்பிகை சக்தியாகவும், அம்மையாகவும் விளங்குகிறது".

இவ்வாறு யாழ். பரியோவான் கல்லூரியின் பிற்றேர் ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற வாணி விழாவில் செந்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் குறிப்புட்டதகவது:-

"நவராத்திரி வரும் ஒன்பது தினங்களும் ஒன்பது சக்திவழிபாடாக அமைகிறது. வீரத்தை வேண்டித் துர்க்கா தேவியையும், செல்வத்தை வேண்டி லட்சுமியையும், அறிவையும், கல்வியையும்வேண்டி கலைவாணியையும் வழிபாடு செய்யும் தினங்களாக இவை அமைகின்றன. கல்லூரியில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு வாணி விழாவே முதன்மையாக அமைகிறது. வாணி விழாவில் இயல், இசை, நடனம், நாடகம் என்பவற்றுக்கு முதன்மை அளிக்கப்படுகிறது. அம்பிகைக்கு நன்றி தெரிவிக்கும் விழாவாக நவராத்திரி விழாவே அமைகிறது" என்று குறிப்பிட்டார்.

திருப்பூங்குடி கே. வி. கே. ஆறுமுகம் கோஷ்டியினரால் "கம்பனும் கலைவாணியும்" என்ற தலைப்பில் வில்லுப் பாட்டு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

பூசையுடன் ஆரம்பிக்கப் பட்ட வாணி விழாவில் மாணவர்களின் துதிப்பாடலும்வாத்தியவிருந்ம், செல்வன் ம. ஞானேந்திரனின் கதாப் பிரசங்கமும் இடம்பெற்றன. கல்லூரியின் இந்து மாமன்றச் செயலாளர் திரு. மகிந்தன் நன்றி கூறினார்.

## அதிபர் சேவைக்குப் பாராட்டு

(சரவணை)

புங்குடுதீவு– மகாவித்தியாலயத்தில் கடந்த 10 ஆண்டுகளாக கடமையாற்றிய பண்டிதர் திரு. வீ. வ. நல்லதம்பியினி சேவைநலத்தைப்பாராட்டும் தீர்மானம் ஒன்றை பிரஸ்தாப வித்தியாலய அபிவிருத்திச்சங்கம் நிறைவேற்றியுள்ளது.

புங்குடுதீவு கொத்தணிப்பாடசாலை அதிபர் திரு. இராசநாயகம் தலைமையில் நடைபெற்ற அபிவிருத்திச் சங்க ஆண்டுக் கூட்டத்தில் தலைவர் தமது உரையில் அதிபர் திரு. நல்லதம்பியின் சேவையைப் பாராட்டிப் பேசுகையில் விஞ்ஞானகூடம், மனையியற்கூடம், சுற்றுமதில் போன்ற அவசிய பணிகளை மேற்கொள்ளச் சங்கம் முயற்சி எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார், மத்திய கல்லூரியின் தரத்திற்கு இவ்வித்தியாலயம் வளர்ச்சி பெற எல்லோரும் உழைக்க வேண்டும் என பண்டிதர் திரு. நல்லதம்பி தமது உரையின்போது குறிப்பிட்டார்.

அபிவிருத்திச் சங்கத்தின் தலைவராக திரு. இராசநாயகமும், காரியதரிசியாக திரு. நா. சுந்தரவாசனும் தெரிவுசெய்யப் பட்டனர். புதியநிர்வாகசபை ஒன்றும் அமைக்கப்பட்டது.

## உரையரங்கு, கவியரங்கு, வெளியீட்டு விழா

[யாழ்ப்பாணம்]

அக்டோபர் 21ன் நினைவாக உரை அரங்கும், கவியரங்கும் 'மக்கள் இலக்கியம்' என்ற சஞ்சிகை வெளியீட்டு விழாவும் திரு க. கிருஷ்ணபிள்ளை தலைமையில் வருகிற 30ம்திகதி சனிக்கிழமை பிற்பகல் நடைபெறவுள்ளது. யாழ். றிம்மர் மண்டபத்தில் இவ்விழாவை நடாத்துவதற்கான ஏற்பாடுகளை தீண்டாமை ஒழிப்புவெகுஜன இயக்கமும், மக்கள் இலக்கிய மன்றமும் மேற்கொண்டுள்ளது.

"பின்தள்ளப்பட்ட மக்களின் குரலை வெளியேகொண்டு வரும் முயற்சியில் ஈடுபடுவதுடன், "மக்கள் இலக்கியம்" என்ற கால் ஆண்டு இதழ் ஒன்றினை வெளியிடுகிறது" என்று குறிப்பொன்றில் மக்கள் கலை இலக்கிய மன்றம் தெரிவித்துள்ளது. [உ]

# ஐ.நா.வில் இஸ்ரேல் தொடர்ந்து இருக்கும்!

## ஈரானின் பிரேரணை தோல்வி!

### சதித்திட்டமென ஈரான் பிரதிநிதிவர்ணனை!

லண்டன் அக் 27

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்திலிருந்து இஸ்ரேலை வெளியேற்ற ஈரான் கொண்டு வந்த பிரேரணை தோல்வியடைந்துள்ளது. இப்பிரேரணைக்கு ஆதரவாக 9 நாடுகளும், எதிராக 74 நாடுகளும் வாக்களித்தன. இந்தியா உட்பட 31 நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை

நோர்வே, சுவீடன் ஆகிய நாடுகள் ஈரானின் இப்பிரேரணையை ஒத்திவைக்கும்படி ஐ. நா. வைக்கோரியிருந்தன. ஆயினும் நேற்று வாக்கெடுப்பு இடம்பெற்றது.

ஈரானிய பிரதிநிதி தமது பிரேரணை தோல்வியடைந்ததையடுத்து கருத்து தெரிவிக்கையில் தமது பிரேரணை தோல்வியடைய ஏற்கனவே சதித்திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது என்றார்.

இஸ்ரேலை வெளியேற்றக் கோரும் ஈரானின் பிரேரணை பெரும்பாலும் தோல்வியடையுமென்றே ஐ நா. வில் அங்கத்துவ நாடுகளாலெதிர்பார்க்கப்பட்டது.

ஈரானின் இப்பிரேரணை ஐ. நா. வில் வெற்றி பெறும் பட்சத்தில் தாம் அச்சபையிலிருந்தும் விலகி விடப்போவதாக அமெரிக்கா அறிவித்திருந்தது. இதனையடுத்து ஈரான் தெரிவித்த கருத்தில் அமெரிக்கா ஐ. நா. வில் இருந்தும் வெளியேறும் பட்சத்தில் அச்சபைக்கு ஏற்படக்கூடிய பொருளாதார நெருக்கடியை தான் ஈடுசெய்வதாக அறிவித்தது. (கி)

### குண்டுவெடிப்பில்

## மாஜிஸ்ட்ரேட், பொலிஸ் அதிகாரி படுகாயம்!

புதுடில்லி அக் 27

வட இந்திய நகரமொன்றில் கைக்குண்டொன்று வெடித்ததால் பலர் காயமடைந்துள்ளதுடன் ஆறுபேர் பலத்த காயமடைந்துள்ளனர். இவ் ஆறுபேரில் மாஜிஸ்ட்ரேட் ஒருவரும் பொலிஸ் சுப்ரீண்டன் ஒருவரும் அடங்குகின்றனர்.

இக்குண்டு வெடிப்பு இடம்பெற்ற உடனேயே அம்புலன்ஸ் வண்டிகள் ஸ்தலத்துக்கு விரைந்து காயமடைந்தவர்களை வைத்தியசாலைகளுக்கு கொண்டு சென்றன. இரண்டு குண்டுகளே வைக்கப்பட்டதாயினும் ஒன்றே வெடித்தது.

இந்த நகரின் நிலைமை தற்போது கட்டுப்பாட்டில் உள்ளதென்றும் பொலிஸார் ரோந்து நடவடிக்கைகளை தொடருகின்றனரென்றும் தெரிவிக்கப்பட்டது. (கி)

## போலந்தின்முன்னாள் அரசியல்வாதிகள்மீது விசாரணை!

வார்ஸோ அக் 27

போலந்தின் இராணுவ அரசாங்கம் இந்நாட்டின் முன்னாள் அரசியல்தலைவர்கள் மீது விசாரணைகளை நடத்தவுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற போலந்து பாராளுமன்ற கூட்டத்தின்போதே இம்முடிவு எடுக்கப்பட்டது

நூறுக்குமதிகமான கம்யூனிஸ பிரதிநிதிகள் இப்பாராளுமன்றக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்படவுள்ள விசாரணைக்குழு முன் இரண்டு முன்னாள் பிரதமர்களும், மூன்றுபிரதிப் பிரதமர்களும் விசாரிக்கப்படுவார்களென்று தெரிவிக்கப்பட்டது.

இப்பாராளுமன்றம் கூட்டத்தில் மதுபோதையில் நிற்றல், வேலையைப் புறக்கணித்தல், துர்நடத்தைகளில் ஈடுபடல் ஆகியனவற்றுக்கெதிரான சட்ட மூலகங்களும் அங்கீகரிக்கப்பட்டன. [கி]

## 86 உலகக்கிண்ண உதைபந்தாட்ட போட்டிகளை நடத்த 3 நாடுகள் விருப்பம்!

லண்டன் அக். 27

"கொலம்பியா 86 ஆம்ஆண்டில் உலக கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளை தாம் நடத்தப்போவதில்லை என்று அறிவித்துள்ளதையடுத்து, கனடா, அமெரிக்கா, பிறேசில் ஆகியன தமது நாடுகளில் அப்போட்டிகளை நடத்த முன்வந்துள்ளன.

"பிறேசிலில் உலக கிண்ண போட்டிகளை நடத்தும்பட்சத்தில் அரசாங்கம் பூரண ஒத்துழைப்பை வழங்குமென்று அந்நாட்டின் உதைபந்தாட்ட சம்மேளனத் தலைவர் தெரிவித்துள்ளார். பிறேஸில் மூன்று தடவைகள் உலகக் கிண்ணத்தைப் பெற்றதென்பது குறிப்பிடத்தக்கது.

கொலம்பியா உலக உதைபந்தாட்டப் போட்டிகளை நடத்த முன்வராததால் அந்

[5ம்பக்கம் பார்க்க]

## பிரிட்டிஷ் பொலிஸாரும் ராணுவமும்துப்பாக்கிச் சமர்!

பெல்பார்ஸ்ட். அக் 27

அயர்லாந்தில் பெல்பார்ஸ்ட் என்ற இடத்தில் பிரிட்டிஷ் பொலிசாரும் இராணுவத்தினரும் துப்பாக்கிச் சமரில் இறங்கினர். இவர்கள் இவ்வாறு நடந்து கொண்டமைக்கு இருசாராரும் ஒருவரையொருவர் அடையாளம் காணக்கூடிய விதத்தில் சீருடை தரியாதிருந்ததே காரணமென்று தெரிவிக்கப்பட்டது.

பெல்பார்ஸ்ட் நகர பொலிசாருக்கு காரொன்றில் ஆயுதங்களுடன் சிலர் நிற்பதாக தகவலொன்று கிடைத்தது. இதனையடுத்து குறிப்பிட்டகார் நின்ற இடத்துக்கு சாதாரண உடையில் சென்ற பொலிசார் அங்கு தமக்கு கிடைத்த தகவல் உண்மையென்பதைக்கண்டு துப்பாக்கிப்பிரயோகத்தில் இறங்கினர்.

ஆனால் அந்த மோட்டார் கார் இராணுவவீரர்கள் சிலரையே கொண்டிருந்தது அதிலிருந்தோர் தாம் யாரென்பதைத் தெரிவிக்கும் அடையாளங்கள் எதனையும் அவ்வாகனத்தின் மீதோ அல்லது தம்மீதோ கொண்டிருக்கவில்லை.

இவ்வாறு சாதாரண உடையில் வந்த பொலிசார் தம்மீது சுடுவதைக்கண்டதும் அவர்கள் பயங்கரவாதிகளாக இருக்கலாமென எண்ணி இவ் இராணுவ வீரர்களும் துப்பாக்கிப்பிரயோகத்தில் இறங்கினர்.

இச்சமர் சூடுபிடிக்கத் தொடங்கவே பொலிசார் ஸ்தலத்துக்கு வந்ததையடுத்து இருசாராரும் சுடுவதை நிறுத்திக்கொண்டனர். இதனையடுத்து இவர்கள் ஒருவரையொருவர் அடையாளம் கண்டுகொண்டனர். (இ)

## இந்திய தளபதி சோவியத்விஜயம்

புதுடில்லி, அக், 27

இந்திய கடற்படைத் தளபதியான அட்மிரல் டோசன் சோவியத்யூனியனுக்கு 7 நாட்கள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

அங்கு அவர் பல்வேறு கடற்படைத் தளங்களைப் பார்வையிடுவதுடன், இராணுவ உயர் அதிகாரிகளையும் சந்தித்து உரையாடுவார். (கி]

## இமயமலையின் இருசிகரங்கள் வெற்றிகொள்ளப்பட்டன!

புதுடில்லி அக். 27

வட சிக்கிம் பிரதேசத்திலுள்ள இமயமலையின் இரு சிகரங்களை இரு இந்திய இராணுவப் பிரிவினர் வெற்றி கொண்டுள்ளனர் இந்த இரு சிகரங்களும் இதுவரை எவராலும் வெற்றிகொள்ளப்படாதவை என்று தெரிவிக்கப்பட்டது.

'கஞ்சுங்கா' என்ற 23 ஆயிரம் அடி சிகரமும், 'கோக்டஸ்' என்ற 21 ஆயிரம் அடி சிகரமுமே வெற்றிகொள்ளப்பட்டவையாகும். கஞ்சுங்கா சிகர உச்சியை மேஜர் விஜய சிங் தலைமையிலான 32 பேர் கொண்ட குழுவினரும், கோக்டாஸ் உச்சியைக் காப்டன் செரியன் தலைமையிலான எட்டுப்பேர் கொண்ட குழுவினரும் அடைந்தனர்.

வட சிக்கிம் முதலமைச்சர் இவ்வெற்றிகளைப் பாராட்டிச் செய்தி வெளியிட்டுள்ளார். (கி)

## புதிய ஆளுநர்

சென்னை, அக், 27

கேரள மாநிலத்தின் புதிய ஆளுநராக திரு. பி. இராமச்சந்திரன் நியமிக்கப் பட்டுள்ளார்.

## அணிசேரா மகாநாட்டில் 2000 பிரதிநிதிகள்

புதுடில்லி அக் 27

அடுத்த ஆண்டு மார்ச் மாதம் ஏழாந்திகதி புதுடில்லியில் ஆரம்பமாகவிருக்கும் 7வது அணிசேரா இயக்க உச்சி மகாநாட்டில் அங்கத்துவநாடுகளைச் சேர்ந்த 2000 பிரதிநிதிகள் பங்கு பற்றுவார்கள் என்று அறிவிக்கப்பட்டது.

அணிசேரா இயக்கத்தில் 97 நாடுகள் அங்கத்துவம் வகிக்கின்றன இவற்றின் சிரேஷ்ட அதிகாரிகளின்மகாநாடு மார்ச் முதலாந்திகதியிலிருந்து இரண்டாந் திகதி வரையும் வெளிநாட்டமைச்சர்கள் மகாநாடு மூன்றாந் திகதியிலிருந்து நான்காம் திகதி வரையும் புதுடில்லியில் நடைபெறவுள்ளன.

வெளிநாட்டுத்தலைவர்களும் பிரதிநிதிகளும் மார்ச் ஐந்தாந் திகதியிலிருநது ஆறாந்திகதி வரை புதுடில்லி வந்து சேருவார்களென்று தெரிவிக்கப்பட்டது.

வெளிநாட்டுத்தலைவர்களின் பாதுகாப்பை முன்னிட்டு விசேட பிரிவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது. மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு வழங்குவதற்கென நல் அறிக்கையொன்றும் தயாரிக்கப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

பிரதமர் திருமதி இந்திரா காந்தி அணிசேரா உச்சிமகாநாட்டுக்கான அழைப்பிதழ்களை அடுத்த சில தினங்களில் அனுப்பத் தொடங்கவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (கி)

உங்கள் வயல்களில் களைகளை ஒழித்து விளைச்சலைப் பெருக்க
மசீட்® பாவியுங்கள்




மசீட்® முளைவிடும் பருவத்திலேயே களைகளைக் கொல்கிறது. விதைக்கப்பட்ட நெற்பயிருக்கு அது எவ்வித தீங்கும் செய்வதில்லை.
LANKEM விநியோகிப்போர்: லங்கெம் சிலோன் லிமிட்டெட் தொலைபேசி: 598292 - 6
® மொன்சன்ரோ கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட வர்த்தக அடையாளம்.
400 மி.லீ. ரூ. 93/-
Grant K & E 4477

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்–காஞ்சனு
காதலிக்க
நேரமில்லை
(புதிய பிரதி) (கலர்)

சாந்தி யாழ்.நகர்]
தினசரி 4 காட்சிகள்
ஷா நவாஸ் – சுமதி
பாதை மாறிய
பருவங்கள்
விரைவில்! எம் ஜி ஆர்.
நவரத்தினம் (கலர்)

ஹவுஸ் புல்!
ஹவுஸ் புல்!!
ராஜா யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
பாக்கியராஜ் – சரிதா
மௌன
கீதங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)
டைரக்ஷன்: பாக்கியராஜ்

மனோகரா [யாழ்நக]
தினசரி 5 காட்சிகள்
Dirty Dozen
War film
29-10-82 முதல்
அழகே உன்னை
ஆராதிக்கிறேன்

றீகல் [யாழ்.நகர்]
தினசரி 4 காட்சிகள்
சில தினங்கள் மட்டும்
முரட்டுக்காளை
[கலர்]

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 6-15 9-15
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி
லொறி டிறைவர்
ராஜாகண்ணு

"சுதந்திரக்கட்சிபிரசாரத்தை

# கருத்து வேறுபாடுகளே பலவீனப்படுத்தியது"

## பொதுச்செயலாளர் அறிக்கை

கொழும்பு

"கட்சிக்குள்ளிருந்து வந்த கருத்து வேறுபாடுகளும், பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதில் ஏற்பட்ட காலதாமதமுமே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிப் பிரசாரத்தை பலவீனப்படுத்தியது என்பதனை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஏற்றுக்கொண்டுள்ளது."

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பொதுச் செயலாளர் திரு. ரட்னசிறி விக்கிரம நாயக்கா விடுத்துள்ள அறிக்கையொன்றில் இதனைத் தெரிவித்துள்ளார் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வாவினால் தேர்தல் காலத்தில் திறக்கப்பட்ட சட்டப்பிரச்னை மக்கள் மனதைக் குழப்பும் வகையில் அமைந்து விட்டது. திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு ஆதரவாக தமது வேட்பாளர் வெற்றி பெற்றால் செல்லுபடியாகாமல் போகுமென்று கொல்வின் பிரசாரத்தைச் செய்திருந்தார்.

பொருளாதார மற்றும் பல விதமான சக்திகளைக்கொண்டதாக அரசு இருந்தது. இதன் மூலம் எமது வேட்பாளரைத் தோற்கடிப்பதற்குச் சகல சக்திகளையும் பாவித்தது.

எமது ஆட்சிக்காலத்தில் எம்முடைய விவசாயக்கொள்கைகளினால் பலனடைந்த யாழ்ப்பாண மாவட்ட விவசாயிகள் எமக்கு வாக்களித்து அங்கு ஐக்கிய தேசியக்கட்சியினரை தோற்கடித்தனர்.

பொது வேலைத்திட்டத்தின் கீழ் ஒன்றுபட்டு மக்களை பாதுகாக்க நடவடிக்கை எடுப்போம்".

"தேசிய இனப்பிரச்னை தீர்வுக்கு

# சோஷலிச சமுதாய அமைப்பே சிறந்தது"

(யாழ்ப்பாணம்)

"தேசிய இனப்பிரச்னை இன்றைய காலகட்டத்தில் ஒரு தனிச் சிறப்பான இடத்தை பெற்றிருக்கின்றது. இப்பிரச்னையின் முற்றுமுழுதான தீர்விற்கு ஒரேயொரு வழி தான் உண்டு. அதுதான் சோஷலிச சமுதாய அமைப்பு சோவியத் நாட்டின் உதாரணம் சகல நாடுகளுக்கும் வழிகாட்டியாக அமைந்துள்ளது

இவ்வாறு இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ். மாவட்ட செயலாளர் திரு. எஸ் விஜயானந்தன் தேசிய மாணவர் சங்கத்தின் யாழ். கிளை ஏற்பாடு செய்திருந்த கருத்தரங்கில் பேசுகையில் தெரிவித்தார்.

திரு சி. சோமேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் அவர் மேலும் கூறியதாவது:

"சோவியத் நாட்டின் தேசிய இனப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு வழிவகைகள் 1917-ம் ஆண்டு நடைபெற்ற புரட்சிக்கு முன்பே ஆரம்பமாகிவிட்டன. சோவியத் யூனியனின் முன் உதாரணம் தேசிய விடுதலைக்கும் சமூக விடுதலைக்கும் போராடும் சக்திகளுக்கு உந்து சக்தியாக விளங்குகிறது. சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி சகல தேசிய இனங்களின் மத்தியிலுமுள்ள சகல உழைக்கும் மக்களையும் தொழிலாளி வர்க்கத்தையும் ஒன்றுபடுத்தியது. புரட்சி நடக்குமுன்பு இனங்களுக்கு மத்தியில நடைபெற்று வந்த சண்டைகள், பகைமைகள் 6 மாதங்கள் முரண்பாடுகள் புரட்சிக்கு பின்பு ஒழிக்கப்பட்டுவிட்டன.

சோவியத் நாட்டுடன் ஒப்பிடுகையில் எமது நாடு மிகவும் சிறிய நாடு. ஆனால் பெரிய பிரச்னைகளுக்கு முகம் கொடுக்கவேண்டிய நாடாக காட்சி தருகின்றது. இதற்கு முக்கிய காரணம் கடந்த காலங்களில் நாம் பின்பற்றி வந்த நடைமுறை சாத்தியமற்ற வழிகளேயாகும்.

இலங்கைவாழ் தமிழ்மக்களின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு அவர்களின் சுயநிர்ணய உரிமை சமத்துவம் ஆகியவற்றினைப் பெற கணிசமான அளவு சிங்கள தொழிலாளர்கள் விவசாயிகளின் ஆதரவும் ஒத்தாசையும் தேவை. இதற்கான போராட்டங்கள் பாராளுமன்றத்திற்கு உள்ளும்புறமும் நடாத்தப்பட வேண்டும். (மா)

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜீவ் - ஜோதி
ரயில் பயணங்களில்
(கலர்)

லிடோ [யாழ்.நகர்]
தினசரி 4 காட்சிகள்
லவகுசா
பாடசாலை மாணவர்க்கு
விசேட ஒழுங்கு செய்து
தரப்படும்

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30.
கல்யாணகுமார் - முத்துராமன் - தேவிகா
நெஞ்சில் ஓர் ஆலயம்
[யாழ்.நகரில் கடைசி முறையாகக் காண்பிக்கப்படுகிறது]
(புதிய பிரதி)

ராணி தினசரி 10-30, 2-30, 6-00, 9-30
(யாழ் நகர்)
மாணவன்
ஜெய்சங்கர்
லக்ஷ்மி
நடித்த
(புதிய பிரதி)

வின்ஸர் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
புகுந்த வீடு
ஏ.வி.எம்.ராஜன்
புஷ்பலதா
லக்ஷ்மி
29 – 10 – 82 முதல்
RISE AND FALL OF IDI AMIN

## வாழ்த்து.

(மன்னார்)

கடந்த ஜனாதிபதி தேர்தலில் தங்களுக்குக் கிடைத்த வெற்றி பொன்னேடுகளில் பொறிக்கப்பட வேண்டிய வெற்றியாகும். ஐ. தே. கட்சியின் மீது மக்கள் வைத்திருக்கும் அசையாத நம்பிக்கையே ஜனாதிபதி தேர்தலில் தங்களுக்கு வெற்றியைத் தேடித் தந்துள்ளது

இவ்வாறு கூறும் வாழ்த்துத் தந்தி யொன்றை ஜனாதிபதி தேர்தலில் அமோக வெற்றியீட்டிய திரு. ஜே ஆர். ஜயவர்த்தனவுக்கு மன்னார் முன்னாள் எம். பி. ஜனாப். எம் எஸ் ஏ. றகீம் அனுப்பி வைத்துள்ளார்.

கட்டைவேலி ஞானசாரியார் கல்லூரியில்

# கொள்ளைபோன தட்டச்சு வந்துசேர்ந்த 'மர்மம்'

(கரவெட்டி)

கட்டைவேலி ஞானசாரியார் கல்லூரியில் கொள்ளையடிக்கப்பட்ட தட்டச்சு இயந்திரம் மீண்டும் அக் கல்லூரியையே வந்தடைந்தது.

இக்கல்லூரியில் இருந்து தட்டச்சு இயந்திரமும், மைக்கிரோஸ்கோப்பும் கடந்தமாதம் கொள்ளையடிக்கப்பட்டன.

இக்கொள்ளைப் பொருட்களில் தட்டச்சு இயந்திரம் மட்டும் கல்லூரி வளவில் மர்மமான முறையில் வைக்கப்பட்டு இருக்கக் காணப்பட்டது.

# பழங்கால யானைப்படை பற்றிய கண்டுபிடிப்பு

தஞ்சாவூர், அக் 27

பெரியார் மாவட்டத்தில் சத்தியமங்கலம்- நல்லூரில் சேரமன்னர் இரவிகோதையின் தமிழ் வட்டெழுத்துக்கல்வெட்டு ஒன்றைத் தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக்கழகத்தின் கல்வெட்டுத் துறையினர் அண்மையில் கண்டுபிடித்தனர், இக்கல்வெட்டு கி பி 9ம்நூற்றுண்டைச் சேர்ந்ததாகும் என்றிருந்த யானைப்படைத் தலைவர்களின் குழு பற்றிய செய்தி இக்கல்வெட்டுமூலம் தெரியவருகிறது.

சமணப் பள்ளிக்கு இரவி கோதையின் ஆணைப்படி சமண வணிகர்கள் கொடை கொடுத்தமையும் அதனை அத்திகோசத்தார் என்னும் யானைப்படை குழுவினர் பாதுகாத்தனர் என்ற செய்தியும் இதில் குறிக்கப்பெற்றுள்ளது. இதன் மூலம் அக்காலவணிகக்குழுதம் உடைமைகளைப் பாதுகாக்கத் தனிப் படை வைத்திருந்த செய்தி புலனாகிறது.

இக்கல்வெட்டில் கோலார் நாடு, புந்நாடு, பட்டாலி ஆகிய பகுதிகள் குறிக்கப்பெற்றுள்ளன. இதில் அத்திகோசம் என்ற குறிப்பு வருவது மிகவும் சுவையானதாகும் தமிழிலக்கியமான பெருங்கதையில் முதல் முறையாக அத்திகோசத்தார் ஐம்பெருங்குழுவுக்கு இணையாகக் கூறப்படுகின்றனர். (உ)

# மூளைசாலிகளது வெளியேற்றத்தால் தடுமாறும் மூன்றும் உலகநாடுகள்

ஜெனிவா. அக். 27

வளர்முக நாடுகளிலிருந்து மூளைசாலிகளின் வெளியேற்றம் அந்த நாடுகளைப்பெரிதும் பாதித்துள்ளது. இந்த மூளைசாலிகளது வெளியேற்றம் இன்று ஒரு சர்வதேசப்பிரச்னையாகிவிட்டது.

இதர நாடுகளிலிருந்து அறிவாளிகளையும் நிபுணர்களையும் தம்மால் வளர்ச்சிபெற்றமேலை நாடுகள் கவர்ந்திழுப்பதுதான் இப்பிரச்னையின் பிரதான அம்சம்.

இவ்வாறு மூளைசாலிகளது வெளியேற்றப் பிரச்னை பற்றி ஆராயும் ஆர். கலெவின்ஸ்கி என்ற நிபுணர் எழுதுகிறார்.

இந்தப்பிரச்னை ஐம்பதுகளின் மத்தியிலேதான் ஆரம்பமாகியது. ஆரம்பத்தில் ஒரு சில விஞ்ஞானிகளு மருத்துவர்களும் பொறியியலாளர்களுமே வளர்முக நாடுகளிலிருந்து வெளியேறி வளர்ச்சி பெற்ற நாடுகளுக்குச்சென்றனர்: பின்னர் இது அதிகரிக்கத்தொடங்கியது, 1960 முதல் 1970 மத்தி வரை ஏறத்தாள 40 000 நிபுணர்கள் வளர்முக நாடுகளிலிருந்து வெளியேறிச் சென்றுள்ளனர்.

இன்னும் சரியான தரவுகளின் பிரகாரம் 1961 முதல் 1976 வரை 61,000 மருத்துவர்களும் சர்ஜன்களும் 123,000 தொழில் நுட்ப நிபுணர்களும் அவர்களுக்கீடான தொழிலாளர்களும் 100 000 பொறியியலாளர்களும் ஆராய்ச்சியாளர்களும் அமெரிக்கா, கனடா, பிரிட்டன் ஆகிய நாடுகளுக்குச் சென்றுள்ளனர் என்றும இந்த பத்திரிகையாளர் எழுதுகிறார்.

## கரவெட்டியில் மின்சார வேலைகள்

(கரவெட்டி)

கரவெட்டி கிழக்குப் பகுதி மின்சாரத்திட்ட வேலைகள் ஆரம்பமாகியுள்ளன

இம் மின்சாரத் திட்ட வேலைகளுக்கென உடுப்பிட்டி எம். பி. திரு த. இராசலிங்கம் ஒரு லட்சத்து 80 ஆயிரம்ரூபாவை பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்துள்ளார்.

★

(கரவெட்டி)

நெல்லியடி பஸ் நிலையத்திலுள்ள இரு மேக்குரி மின் விளக்குகளும் எரியாத நிலையிலுள்ளதால் இப் பஸ் நிலைய இரவுவேளை இருளில் மூழ்கிக் கிடக்கிறது. இதனால பஸ் பிரயாணிகளும் குறிப்பாக மாணவிகளும் பெரும் கஷ்டத்திற்குள்ளாகி வருகின்றனர்.

## உதை

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

நாடு இருக்கும் பிரதேசத்திலுள்ள தமக்கே அப்போட்டியை நடத்த முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென்றும் பிற்றவில் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் முன்னாள் ராஜாங்க அமைச்சரான திரு ஹென்றி கிஸிஞ்சரும் தமது நாட்டில் உலக உதைபந்தாட்டப்போட்டிகள் நடத்தப்பட வேண்டுமென்று விருப்பம் தெரிவித்துள்ளார்.

"நாம் கொலம்பியாவில் நடைபெறும் உலக கிண்ணப் போட்டிகளை தடுக்கவில்லை. ஆனால் அந்த நாடு இப்போட்டிகளை நடத்தாத பட்சத்தில் நாம் அவற்றை நடத்த ஆயத்தமாக உள்ளோம்" என்று இவர் கூறினர். (கி)

## ரூபா 1 லட்சம் நிதி ஒதுக்கீடு

[மன்னார்]

பேசாலை தள்ளுக்குடியிருப்பு றுமன் கத்தோலிக்க பாடசாலையின் அபிவிருத்திக்காக பன்முகவரவு செலவித்திட்டத்தின்கீழ் ஒரு லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தம்மைச் சந்தித்த துள்ளுக்குடியிருப்பு பாடசாலை அபிவிருத்தி சபையிடம் மன்னார் எம். பி திரு பி எஸ். சூசைதாசன் உறுதியளித்தார்.

இச்சந்திப்பின்போது பாடசாலை அபிவிருத்தி சபையின் சார்பில் அதிபர் திரு. ஜே ஈ. அன்ரனிகுலாஸ், ஆசிரியர் திரு எஸ் ஓ மிராண்டா ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டு பாடசாலையின் தேவைகள் பற்றி எடுத்துக் கூறினர்.

# "வன்செயல்கள் இப்பகுதி மக்களையே பாதிக்கும்!"

## யாழ். அரச அதிபர் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

"நேற்று விடியற்காலை சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தைத் தாக்கியதுடன் மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்களும் விசாரணைக்குட்படுத்தப்பட்டிருந்த ஒருவரும் கொடூரமாக சுட்டுக் கொல்லப்பட்டதையும். ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் காயப்படுத்தப்பட்டதையும் நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். இப்படியான வன்செயல்கள் அப்பகுதி மக்களைப் பெரிதும் பாதிக்கிறது." யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்திசபை செயலாளரும், அரசாங்க அதிபருமான திரு தேவநேசன் நேசையா விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு கூறியுள்ளார் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொலிஸ் படையினருக்கு எதிராக, முன்பு நடைபெற்ற வன்செயல்சம்பவங்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள சில பொலிஸ் நிலையங்களை மூடுவதற்கு ஏதுவாக அமைந்தமையின், அதனால் பாரிய குற்றங்களும் சட்டத்தை மீறிய செயல்களும் அதிகரித்தன. இதன் பெறுபேறாக யாழ். மாவட்டப் பொதுமக்கள் மிகவும் பாதிக்கப்பட்டனர்.

"யாழ். மாவட்ட மக்கள் குழப்பத்தைஏற்படுத்தக்கூடிய வன்செயல்களை முற்றாக எதிர்க்கிறார்கள் என்பதில் எனக்கு எவ்வித சந்தேகமும் இல்லை இவ் வன்செயல்பற்றிய விசாரணையில் ஈடுபட்டுள்ள சட்ட நடவடிக்கை அதிகாரிகள் அனைவருக்கும் வேண்டிய உதவிகள் அனைத்தையும் அளிக்க வேண்டுமென நான்பொதுமக்களை வேண்டுகிறேன்."

### பாராளுமன்ற

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதேசமயம் ஐக்கிய தேசியக் கட்சியின் சகல எம் பிக்களிடமிருந்தும் ராஜினாமா கடிதத்தைப்பெற்று, பாராளுமன்றக்குழுவை புனரமைப்புச் செய்யவேண்டுமென்றும் ஜனாதிபதி அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவித்தார்.

சில ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்கள், தொடர்ந்து எம். பி யாக இருப்பதை மக்கள் விரும்பவில்லையென்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் மக்கள் 53 சதவீதம் வாக்களித்து மீண்டும் தமமைப் பதவியில் அமர்த்தியிருப்பதாகவும், 1977ம் ஆண்டு ஐ. தே. க. அளித்த கொள்கைக்கு பேராதரவு கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

139 தேர்தல் தொகுதிகளில் மக்கள் ஐ தே. கட்சிக்கு மீண்டும் ஆதரவளித்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்

கட்சியின் செயற்குழு பாராமன்றக்குழுவை சந்தித்தபின் மேலும் அறிக்கை விடப்படும் என்றும் தெரிவித்தார் [க]

### யாழ்.மாவட்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எல்லாவற்றையும் அப்படியே விட்டுவிட்டுச் சென்றுவிட்டனர்.

கலை நிகழ்ச்சியில் கலந்து கொள்ளவிருந்த மாணவிகள் ஒப்பனையுடனே வீதியால் ஓடிக்கொண்டிருந்தனர்.

நகரில் புகையிரதக் கடவை யொன்று பூட்டப்பட்டிருந்ததால் நூற்றுக்கு மேற்பட்ட மோட்டார் சைக்கிள்களும், வாகனங்களும் போகமுடியாத நிலையில் காணப்பட்டன.

தியேட்டர்களில் முதலாம் காட்சி நிறுத்தப்பட்டது வெளி இடங்களுக்குப் போகமுடியாதவர்கள் சில வர்த்தக நிலையங்களிலும், வீடுகளிலும் தஞ்சமடைந்தனர். தூர இடங்களிலிருந்து பஸ்களிலும், மினிபஸ்களிலும் வந்தவர்கள் பஸ்நிலையத்தில் பலத்த கஷ்டப்பட்டனர்.

நேற்றிரவு கொழும்பு ரயிலில் வந்த பிரயாணிகள், யாழ் ரயில் நிலையத்திலிருந்து பஸ்கள் மூலம் சென்றனர். [க]

### மா, பாண் விலை குறைப்பு

[கொழும்பு]

ஒரு கிலோ மாவின் விலை 6 ரூபா 65 சதத்திலிருந்து 5 ரூபா 95 சதமாக இன்று முதல் குறைக்கப்பட்டுள்ளது.

மாவின் மொத்த விலை கிலோ 5 ரூபா 80 சதமாக இன்று முதல் விற்கப்படும்.

பாணின் விலை 2 ரூபா 70 சதத்திலிருந்து 2 ரூபா 50 சதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

### பல்வேறு ரக

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கடத்தினர் என்றும் கூறப்படுகிறது.

தங்களது பல நடவடிக்கைகளையும் ஒரே சமயத்தில் திட்டமிட்டுச் செய்துள்ளதுனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பொலிஸ் நிலையத்தில் இருந்த 33 துப்பாக்கிகளை அவர்கள் எடுத்துச் சென்றுள்ளனர். இவைகளில் 2ஷொட்கன் என்றவகையைச் சேர்ந்தவையென்றும், 19 ரிப்பீட்டன் என்றவகையைச் சேர்ந்தவையென்றும் 9 ரைபிள்கள். ஒரு பிஸ்டல், இரண்டு சப்மெஷின் துப்பாக்கிகள் மற்றும் பொலிசாரின் பாதுகாப்பிலிருந்த பிடிபட்டதுப்பாக்கிகள் என்றும் தெரியவருகின்றது.

### 3 பொலிஸார்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கூறப்படுகிறது. பொலிஸ் நிலையத்தில் வெடிக்காத பெரிய குண்டு ஒன்று காணப்பட்டது. ஏராளமான வெற்றுத் தோட்டாக்களும் காணப்பட்டன,

#### ஒரே வெடிச்சத்தம்

பொலிஸ் நிலைய வாசலில் காவலிலிருந்த கான்ஸ்டபிள் கந்தையா எதிர்த்தாக்குதல் நடத்தியபோது சுடப்பட்டாரென்றும், கத்திவெட்டுக்குள்ளானாரென்றும் சுமார் பத்து நிமிடங்கள் ஒரே வெடிச்சத்தமாக இருந்ததாகவும் கூறப்பட்டது. கைக் குண்டுகளும் பயன்படுத்தப்பட்டதாம்.

வீதியின் இரு பக்கங்களும் தடைசெய்யப்பட்ட பின்னரே சம்பவம் இடம்பெற்றதாகவும் தொலைபேசி மற்றும் தொடர்புசாதனங்கள் துண்டிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

#### மாடியிலிருந்து குதித்து

பொலிஸ் நிலைய மேல்மாடியிலிருந்த சார்ஜன்ட் கந்தையாவும் பலத்த காயமடைந்தார். மற்றொரு பொலிஸ் கான்ஸ்டபிளான ஜெயத்திலகா சம்பவத்தின்போது மேல் மாடியிலிருந்து குதித்தபோது பலத்த காயமடைந்தார்.

பொலிஸ்நிலையப் பகுதி பலத்த பாதுகாப்புக்குட்படுத்தப்பட்டு, போக்குவரத்து நேற்றுக்காலை தடைசெய்யப்பட்டது.

#### வாடகைக்கு மினிபஸ்

வரணியிலுள்ள தில்லையம்பலப்பிள்ளையார் கோவிலுக்கு மினிபஸ்ஸை இளைஞர் ஒருவர் வாடகைக்குப் பிடித்து முற்பணம் கொடுத்திருந்ததாகவும், இளைஞர்கள் தெரிவித்தபடி நேற்றுஅதிகாலை 4மணிக்கு யாழ். நகரில் குறிப்பிட்ட ஒரு இடத்திற்கு மினிபஸ் சென்றதாகவும் கூறப்படுகிறது. அச்சமயம் வேட்டி சால்வை அணிந்த இரு இளைஞர், பஸ்ஸில் ஏறிக்கொண்டதாகவும், அதன் பின் 6 காற்சட்டை அணிந்த இளைஞர்கள் வந்து ஏறிக் கொண்டதாகவும் கூறப்படுகிறது.

#### கை, கால், கண் கட்டப்பட்டு

துப்பாக்கிமுனையில் சாரதியும், கிளினரும் கை, கால், கண் கட்டப்பட்டு பஸ்ஸின் பின்பக்கத்தில் கிடத்தப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

பொலிஸ் எதிர் துப்பாக்கி தாக்குதலில் இளைஞர் கோஷ்டியைச் சேர்ந்த சிலர் காயமடைந்து விழுந்ததாகவும் அதில் மூவர் இறந்திருக்கக் கூடுமென பொலிஸ் வட்டாரங்கள் சந்தேகிக்கின்றன.

3 இளைஞர்களையும், மினி பஸ்ஸில் வந்த கோஷ்டியினர் தங்களுடன் தூக்கிச் சென்றதாகவும் கூறப்படுறது.

இளைஞர்கள் கடத்திச் சென்ற மினிபஸ்ஸை கண்டு பிடிப்பதில் இராணுவத்தினரும் பொலிசாரும் ஈடுபட்டுள்ளனர்.

நேற்றுக் காலை சாவகச்சேரிப் பகுதிக்கு இராணுவம் அழைக்கப்பட்டிருந்தது.

நுணுவில் பகுதி மாணவர்கள் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, இந்துக்கல்லூரி, அரசினர் மகளிர் கல்லூரிக்கு பொலிஸ் நிலைய வீதிவழியாகத்தான் செல்லவேண்டும். இவ்வீதி போக்குவரத்துக்குத் தடைசெய்யப்பட்டதால் மாணவர் திரும்பிச்சென்றனர் சாவகச்சேரியில் ஒரே பரபரப்பாகக் காணப்பட்டது

மினிபஸ்ஸில் வந்த இளைஞர்களைத்தவிர மற்றும் சுமார் 40 இளைஞர்கள் இத்தாக்குதலில் பங்குகொண்டிருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

#### ஐ. ஜி. பி. விஜயம்

பொலிஸ்மா அதிபர் திரு. உருத்திரா ராஜசிங்கமும், வடபிராந்திய பொலிஸ் மாஅதிபர் திரு. ஆர். பி. ராஜகுரு, பொலிஸ் அதிபர் திரு. ஏ ஈ. ஆனந்தராஜா ஆகியோருடன் ஹெலிக்கொப்படரில் நேற்று திடீர் விஜயம் ஒன்றைமேற்கொண்டிருந்தார்.

நேற்று அதிகாலை தாக்குதலுக்குள்ளான சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தைப் பார்வையிட்ட பொலிஸ் மா அதிபர், யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில், மற்றும் பொலிஸ் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினர்.

#### பலியான பொலிசார்

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத் தாக்குதலின்போது துப்பாக்கிச்சூட்டுக்குப் பலியான பொலிஸ் கான்ஸ்டபிள் கந்தையாவின் இறுதிச்சடங்கு இன்று உசனில் நடைபெறும். இவர் 5 ஆண்குழந்தைகளினதும், ஒரு பெண்குழந்தையினதும் தந்தையாவார்.

மற்றவரான கருணாநந்தனின் இறுதிச்சடங்கு நாளை பண்டத்தரிப்பில் நடைபெறும் இவர் திருமணமாகி ஒரு குழந்தைக்கு தந்தையாவார்.

இச் சம்பவத்தில் பலியான கேகாலையைச்சேர்ந்த திலகரத்தின பொலிஸ் ஜீப் சாரதியாக கடமையாற்றினர் இவர் திருமணமாகாதவர். இவரின் பூதவுடல் இவரின்சொந்தஊருக்கு கொண்டுசெல்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

கொள்ளைக்குப் பாவிக்கப்பட்டதாக கூறப்படும் மினி பஸ்ஸின் இலக்கம் 29 ஸ்ரீ7309 என்றும்இதுமாதகலைச் சேர்ந்ததென்றும் தெரியவருகிறது.

மினி பஸ், சாரதியும்.கிளனரும் புத்தூரில், வண்ணாத்தி பாலத்தடியில் இறக்கிவிடப்பட்டார்களென்றும், இவர்கள் நடந்துசென்று பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார்கள் என்றும் கூறப்படுகிறது. தற்போது இவர்கள் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர். விசேட புலனாய்வுக்குழு விசாரணையை மேற்கொண்டு வருகிறது.

கடற்பகுதிகளில், பலத்த ரோந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. வாகனங்கள் சோதனையிடப்பட்டு வருகிறது. (க)


### கொக்குவில் இந்துக்கல்லூரி பரிசளிப்பு விழா - 1982

காலம்: 29-10-82 வெள்ளிக்கிழமை பி.ப.4-00 மணி

இடம்: கல்லூரி மண்டபம்

பிரதம விருந்தினர்: திரு. கி. பாலகிட்ணர் அவர்கள் (உயர்நீதிமன்ற நீதியரசர்)

பரிசு வழங்குபவர்: திருமதி லக்ஷ்மிதேவி பாலகிட்ணர் அவர்கள்

தங்களை அன்புடன் அழைக்கின்றோம்

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்

கொக்குவில் இந்துக்கல்லூரி, கொக்குவில்,

4960

### விற்பனைக்கு

கூடுதல் பயன்தரும் நல்ல இன செவ்விளநீர்த் தென்னங் கன்றுகள் விற்பனைக்கு உண்டு.

மில்க்வைற்,
யாழ்ப்பாணம் [4970]

# ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்

## புதிய உல்லாச பஸ்சேவை

தினசரி மாலை 8-30 மணி கொழும்பில் இருந்து----யாழ்ப்பாணத்துக்கு
தினசரி மாலை 8-00 மணி யாழ்ப்பாணத்தில் இருந்து-----கொழும்புக்கு
கண்ணியமான பாதுகாப்பான பஸ்சேவை

யாழ்ப்பாணத்தில் டிக்கற் பெறுமிடங்கள்:-

(1) ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்
இல: 82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 24310

(2) யாழ். ஐக்கிய வியாபார சங்கம்
இல: 420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
போன்: 22370—22438—22537

(3) யாழ். மெட்டல் சேல்ஸ் சென்ரர்
இல: 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 23596

(4) குயிக் ட்ரவல்ஸ் அன்ட் டூர்ஸ்
சரஸ்வதி கார்டின்ஸ், சேர்ச் லேன், சாவகச்சேரி
தொலை பேசி இல; 22273. சாவகச்சேரி

கொழும்பில் டிக்கற் பெறுமிடங்கள்:

(1) ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்
இல: 463, காலி வீதி, கொள்ளுப்பிட்டி.
தொலைபேசி இல: 89190

(2) ரவீந்திரா ஸ்டோர்ஸ்
இல: 285, காலி வீதி, வெள்ளவத்தை.

(3) லங்கா பம்பே சுவீட் ஹவுஸ்,
இல.105, ஒல்கொட் மாவத்தை, புறக்கோட்டை.
தொலைபேசி இல; 22830

(4) ஸ்ரீமணிமலர் ஸ்டோர்ஸ்
இல: 157/2, ஸ்ரீகதிரேசன் வீதி, கொழும்பு—11
தொலைபேசி இல: 23277

(5) நியூ புஷ்பா ஸ்டோர்ஸ்
இல; 127, காலி வீதி. பம்பலப்பிட்டி.
தொலைபேசி இல:88866


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1982-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under numbre Q.B. 100236/81. Eelanaadu - P. O. Box 49. Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126.